**செ.வெ.எண்-56** **நாள்-28.03.2019**

# அரியலூர் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்திய தேர்தல் ஆணையம் வரும் **நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019** முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் மக்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவிற்கிணங்க தேர்தல் விழிப்புணர்வு மனித சங்கிலி நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி தேர்தல் பொது பார்வையாளர் **முனைவர்.கே.ஹெச்.குல்கர்னி, இஆப., (Dr.K.H. KULKARNI, IAS.,) (மஹாராஷ்டிரா மாநில பழங்குடியின மேம்பாட்டு ஆணைய ஆணையர்)** அவர்கள் கலந்துகொண்டார்கள்.

மேலும், மனித சங்கிலி நிகழ்ச்சியில், தேர்தல் சம்மந்தமான 100 சதவீதம் வாக்களிப்போம், வாக்களிப்பது நமது ஜனநாயக கடமையாகும், எந்தவொரு வாக்காளரும் விடுபடக்கூடாது போன்ற விழிப்புணர்வு அடங்கிய பதாகைகள் ஏந்தி அரியலூர் அண்ணாசிலை முதல் தேரடி வரை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தைச் சேர்ந்த 600-க்கும் மேற்பட்ட இருபால் பயிற்சியாளர்களை (அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ, மாணவியர்கள்) கொண்டு மனித சங்கிலி நடைபெற்றது. தொடர்ந்து, பேரணியாக தொழிற் பயிற்சி நிலையத்திற்கு சென்று அரியலூர் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் தலைமையில் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழியினை இருபால் பயிற்சியாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், அரியலூர் கோட்டாட்சியர் நா.சத்தியநாராயணன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.ரவிசந்திரன், வட்டாட்சியர் கதிரவன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.ஜெயஅருள்பதி, தொழிற்பயிற்சி நிலைய முதல்வர் நாகராஜன், ஒருங்கிணைப்பாளர் பழனியப்பன் மற்றும் தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**